தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

விலை ரூ.15 மலர் 22 | இதழ் 9 ஜனவரி 2021

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

ஜனவரி 2021

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

மாதந்தோறும் முற்றம் இதழின் வாயிலாக உங்களை சந்தித்து, உங்களுடன் எனது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி.

“பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்; எட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காண் என்று கும்மியடி” என்ற மகாகவி பாரதியாரின் பொன் வரிகளுக்கு ஏற்ப, இன்று அனைத்து துறைகளிலும், ஆண்களுக்கு நிகராக மட்டுமல்லாமல், அதற்கும் மேலாகவும் தங்களின் பங்களிப்பை பெண்கள் செலுத்தி வருகிறார்கள். கைத்தொழில் முதல், பெரும் இயந்திரத் தொழில் வரையிலும், கலைப்பணி முதல் விஞ்ஞானத் தொழில் வரையிலும், பெண்களின் பங்களிப்பு அளவிடற்கரியது. வீட்டை சிறப்புற நிர்வகிக்கும் பெண்கள் இன்று நாட்டையும் நிர்வாகம் செய்கிறார்கள்.

வெளியுலகம் அறியாமல் வீட்டிலேயே அடைபட்டு, கல்வி அறிவு மறுக்கப்பட்டு, தங்களின் அத்தியாவசியத் தேவைகளுக்குக் கூட பிறரின் தயவை எதிர்நோக்கியிருந்த பெண்களை, இன்று தொழில் முனைவோராக உருமாற்றிய பெருமை நமது சுய உதவிக் குழு இயக்கத்தையே சாரும். மாநிலத்தின் கடைக்கோடி கிராமத்தில் வசிக்கும் பெண்கள் கூட சுய உதவிக் குழு இயக்கத்தில் இணைந்து இன்று தொழில் முனைவோராக உயர்ந்து பொருளாதார சுய சார்பு பெற்றுள்ளனர்.

“சிறு துளி பெருவெள்ளம்” என்பது போல் சின்னஞ்சிறு இயக்கமாகத் தோன்றிய மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் இன்று அசுரவளர்ச்சி பெற்றுள்ளது என்பதையும், இவ்வளர்ச்சிக்கு காரணம் நீங்கள்தான் என்பதையும் யாராலும் மறுக்க முடியாது.

ஒற்றுமைக்கும், அயராத உழைப்பிற்கும், தடைகளைத் தகர்த்து முன்னேறும் செயல் வேகத்திற்கும், தோல்விகளை வெற்றிகளாக்கும் மனவலிமைக்கும் உரியவர்கள் என்ற பெருமை பெற்றவர்கள் நீங்கள். மற்றவர்களுக்கு முன்னத்தி ஏராக இருக்கும் உங்களுக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் உந்து சக்தியாக தொடரும்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளில் இருந்து நாடு சிறிது சிறிதாக மீண்டு வருகிறது. கொரோனா தொற்றால் விதிக்கப்பட்ட ஊரடங்கில் பல்வேறு தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் முடங்கிக் கிடந்த தொழில்கள் மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளன. சில கட்டுப்பாடுகளுடன் போக்குவரத்து வாகனங்களும் இயங்க அரசு அனுமதித்தாலும் நாம் தொடர்ந்து கவனத்துடன் இருக்க வேண்டும். பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், மற்றவர்களையும் பாதுகாப்புடன் இருக்க அறிவுறுத்தல் வேண்டும்.

விரைவில் கோடைக்காலம் துவங்கவுள்ளது. பூமத்திய ரேகைக்கு அருகில் இருக்கும் நமது நாட்டில் ஏறத்தாழ ஆறு மாதங்களுக்கு கோடை வெயிலின் தாக்கம் இருக்கும். கோடைக்காலம் என்றாலே தண்ணீரின் தேவையும், பல்வேறு நோய்களின் தாக்குதலும் கூடுதலாக இருக்கும் என்பதால், அரசு எடுக்கும் பல்வேறு நடவடிக்கைகளில் நாமும் நம்முடைய பங்களிப்பைச் செலுத்த வேண்டும்.

கடந்த ஆண்டு நிலவிய இக்கட்டான சூழலிலும் சுய உதவிக் குழுவினர் தன்னலம் கருதாமல் தங்களின் பணிகளை சிறப்புடன் செய்து வந்துள்ளனர் என்பதை அனைத்து தரப்பினரும் அறிவர். அதுபோல எதிர்வரும் காலங்களிலும் நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும். உங்களின் வெற்றிப் பயணத்திற்கு உறுதுணையாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் துணைவரும் என்பதை உறுதிபட தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்.

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

குறளும்-பொருளும்

ஞாலம் கருதினுங் கைகூடும் காலம்
கருதி இடத்தால் செயின்

செயலை முடிப்பதற்கு ஏற்ற காலத்தை அறிந்து, இடத்தோடு பொருந்துமாறு செய்தால், உலகமே வேண்டும் எனக் கருதினாலும் கைகூடும்.



உள்ளடக்கம்...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்து மடல்!	05
மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்	06
மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்குதல்	09
தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம்	14
மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஆய்வு	15
ஒரு சொல் கேளீர்...	19
முற்றக் கச்சேரி	31
மகளிர் தொழில் முனைவோருக்கோர் அரிய வாய்ப்பு...!	33

இன்பாக்ஸ்

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்,
முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு முற்றம்

மலர் 22
இதழ் 9
ஜனவரி 2021
விலை ரூ.15

கௌரவ ஆசிரியர்கள்	**திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,** மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., செயல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தலைமை செயல் அலுவலர் (பொ), தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்	**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்
ஆசிரியர் குழு	**ஜா. சம்பத்,** கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	கே. சுமதி, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	எஸ். சாமுவேல் இன்பதுரை, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
நிர்வாக ஆசிரியர்	**ரா. ஜீவா,** பொது மேலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிதி நிர்வாகம்	**சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்	**எஸ். விஜயலட்சுமி,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
துணை ஆசிரியர்	**ஏ. கண்ணன்**
முதுநிலை கணக்காளர்	**சு. சசிகலா**
பிழை திருத்துபவர்	**எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு	ஆ. சுரேஷ் பாபு

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

நிலையான வளர்ச்சிக்கு வித்திடும் ஆண்டு...

அன்புள்ள வாசகர்களுக்கு

2021 புத்தாண்டை மகிழ்ச்சியுடனும், புத்துணர்வோடும் மற்றும் நம்பிக்கையோடும் வரவேற்போம். ஒவ்வொரு ஆண்டு பிறக்கும் பொழுதும் அந்த ஆண்டு வளமாகவும், நலமாகவும் இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையோடுதான் அந்த ஆண்டை தொடங்குவது வழக்கம். அதே உணர்வோடு இந்த ஆண்டையும் தொடங்குவோம்.

ஒவ்வொரு ஆண்டிற்கும் ஒரு மைய கருத்தை ஐக்கிய நாடுகளின் சபை அறிவிக்கும். இந்த 2021ம் ஆண்டிற்கு நான்கு மைய கருத்துக்களை அறிவித்துள்ளது. 1. அமைதி மற்றும் நம்பிக்கைக்கான ஆண்டு, 2. நிலைத்த வளர்ச்சிக்கான புதுமையான முறையில் பொருளாதார பெருக்கத்திற்கான வழிமுறைகளை உருவாக்குவதற்கான ஆண்டு, 3. பழங்கள் மற்றும் காய்கறிகளுக்கு முக்கியத்துவம் தருவதற்கான ஆண்டு, 4. குழந்தை தொழிலாளர் ஒழிப்பிற்கான ஆண்டு. இந்த நான்கு நோக்கங்களையும் நிறைவேற்ற அனைத்து நாடுகளும் முன்னுரிமை அளித்து செயல்படுவதன் மூலம் நிலையான வளர்ச்சியை கொண்டு வர ஐ. நா. சபை வலியுறுத்துகிறது.

மனித குலத்தினிடையே அமைதியும், நம்பிக்கையும் மிகவும் தேவையான ஒன்றாகும். மக்களை தொடர்ந்து வழிநடத்துவதற்கும், அவர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் எந்த ஒரு நாட்டிற்கும் நிலையான வளர்ச்சி அவசியமானதாகும். சென்ற ஆண்டு பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டதை படிப்பினையாக எடுத்துக் கொண்டு, மக்கள் அனைவரும் மனதளவிலும், உடலளவிலும் சுகாதாரமாக இருப்பதற்கு, பழங்கள் மற்றும் காய்கறிகளை அதிகளவில் உற்பத்தி செய்வதோடு அவற்றை பயன்படுத்துவதின் அவசியத்தையும் உணர வேண்டியுள்ளது. உலகின் வருங்கால சொத்துக்களாக விளங்கும் குழந்தைகளை முறையாக தயார் செய்ய சிறு வயதிலேயே அவர்களை பணியில் ஈடுபடுத்துவதை தடுத்து நிறுத்த வேண்டியது சமுதாயத்தின் கடமையாகும்.

இந்த நோக்கங்களை அரசு மட்டுமே நிறைவேற்றிவிட முடியாது. குடிமக்களின் ஒத்துழைப்பும் பங்கேற்பும் அவசியமானதாகும். உங்கள் மகளிர் குழுக்களிலும், உறுப்பினர்களின் குடும்பங்களிலும் இந்த நோக்கங்களை செயல்படுத்துவதற்கான திட்டமிடல் அவசியமாகும். சரியாக திட்டமிடுங்கள்; வளர்ச்சியை நோக்கி செல்லுங்கள். மகளிர் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் முற்றம் புத்தாண்டு வாழ்த்துகளையும், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு,

(எஸ்.சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்
ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்து மடல்!

கொரோனா பெருந்தொற்றிலிருந்து மக்களைக் காக்கும் இவ்வரசின் மகத்தான பணியில், முகக்கவசம் தயாரித்தல், சானிடைசர், திரவ சோப்பு போன்ற சுகாதாரப் பொருட்கள் தயாரித்தல் மற்றும் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் ஆகியவற்றில் மகளிர் சுயஉதவிக் குழுக்களின் செயல்பாடுகள் பெரிதும் பாராட்டத்தக்கதாய் இருந்தது என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

எடப்பாடி **K. பழனிசாமி**
முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
புனித ஜார்ஜ் கோட்டை
சென்னை - 600 009.

நாள் : 5.1.2021

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அன்பையும் ஆசியையும் பெற்ற பாசமிகு மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களே! என் இனிய சகோதரிகளே!

ஆண்களும் பெண்களும் சம உரிமை பெற்று சரிநிகர் சமமாக வாழவேண்டும் என்ற உன்னத இலட்சியத்துடன் மாண்புமிகு அம்மா அவர்கள் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தினார்கள். அவற்றில், நாடே போற்றும் **மகளிர் சுய உதவிக்குழு இயக்கம்** என்பது மாண்புமிகு அம்மா அவர்களின் மகத்தான, தனித்துவம்மிக்க, பெருமைமிக்க ஓர் சிறந்த திட்டம் ஆகும்.

மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய முயற்சியின் விளைவாக இன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் 7.22 இலட்சம் மகளிர் சுயஉதவிக்குழுக்கள் 1.07 கோடி உறுப்பினர்களைக் கொண்டு சீரோடும் சிறப்போடும் நம் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இம்மகளிர் சுயஉதவிக்குழுக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கும், வேளாண்மை, பால்வளம், ஆயத்த ஆடைகள், கைவினைப் பொருட்கள், சிறுவணிகம், சிறுதொழில்கள் உள்ளிட்ட பல்வேறு தொழில்களின் வளர்ச்சிக்கும் 2011ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு டிசம்பர் வரை வங்கிக் கடனாக **80,624 கோடி ரூபாய்** வழங்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் மகத்தான சாதனை படைக்கப்பட்டுள்ளது.

எனது ஆணைக்கிணங்க, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்களின் நேரடிப் பார்வையில் வளர்ச்சிப் பணிகள் அனைத்திலும் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து திகழ ஜல் ஜீவன் இயக்கம், தூய்மை பாரத இயக்கம், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஊட்டச்சத்து, உடல்நலம், பாலின சமத்துவம் போன்ற பல்வேறு செயல்பாடுகளில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். அனைத்து மாவட்டங்களுக்கும் நான் சுற்றுப்பயணம் மேற்கொண்டு உங்களுடன் கலந்துரையாடும் போது, உங்களின் ஈடுபாட்டை நேரில் கண்டு மகிழ்ந்தேன்.

வேலைக்குச் செல்லும் பெண்கள் தங்கள் வீட்டிலிருந்து பணியிடங்களுக்கு எளிதாகவும், விரைவாகவும் சென்று வர மாண்புமிகு அம்மாவின் அரசு மானியத்துடன் கூடிய "அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தை" செயல்படுத்தி வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களின் அற்புதத் திட்டமான அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் கீழ் நபர் ஒருவருக்கு 25,000 ரூபாய் மானியமும், மாற்றுத் திறனாளிகளுக்கு 31,250 ரூபாய் மானியமும் வழங்கப்படுகிறது. இதுவரை **2.84 இலட்சம்** மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வாங்க அரசால் **726 கோடி ரூபாய்** மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

மேலும், உலக வங்கி நிதியுதவியுடன் **தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தை தமிழ்நாடு அரசு 30 மாவட்டங்களில் 120 வட்டாரங்களில் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தொழில் புரிய ஆர்வமுள்ள மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் தொழில் முனைவோராக உயர்ந்திட பல்வேறு வழிவகைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இத்திட்டத்தை நன்கு பயன்படுத்தி வளம்பெற வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். கொரோனா பெருந்தொற்று காலத்தில் நலிவடைந்த தனிநபர் தொழில்கள், குழு தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் ஆகியவற்றின் மேம்பாட்டிற்கு இத்திட்டத்தின் கீழ் 300 கோடி ரூபாய் தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ளது என்பதையும் நான் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.**

நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், வளமிக்க சிந்தனையும், கடும் உழைப்பும் கொண்டு ஊரகப் பகுதிகளிலும், நகர்ப்புறங்களிலும் மாபெரும் வளர்ச்சி பெற்றுவரும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் அனைவரிடத்திலும் **நான் மாண்புமிகு அம்மா அவர்களைக் காணுகிறேன்.** மகளிராகிய நீங்கள் கல்வி, சமூக, பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்து துறைகளிலும் மேம்பாடு பெற்று, மகிழ்ச்சியுடன் வாழ தமிழ்நாடு அரசு முழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது என்பதை நான் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாருங்கள்! ஒன்றாய்க் கரம் சேர்ப்போம்! அயராது உழைப்போம்!
மாண்புமிகு அம்மாவின் வழியில் பொற்கால தமிழ்நாட்டை தொடர்ந்து காண்போம்!
மகளிர் சுயஉதவிக் குழு அன்பு சகோதரிகள் அனைவருக்கும்
இனிய ஆங்கில புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்துகள்!

உங்கள் அன்பு சகோதரன்,

(எடப்பாடி **K. பழனிசாமி**)

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 16.12.2020 அன்று கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. எம். ஆர். விஜயபாஸ்கர், சட்டமன்ற உறுப்பினர்கள், கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ். மலர்விழி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 16.12.2020 அன்று கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி, மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் திரு. எம். ஆர். விஜயபாஸ்கர், சட்டமன்ற உறுப்பினர்கள், கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எஸ். மலர்விழி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 17.12.2020 அன்று அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், அரசு தலைமைக் கொறடா திரு. எஸ். ராஜேந்திரன், சட்டமன்ற உறுப்பினர்கள், அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி த. ரத்னா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு மற்றும் கட்டுப்படுத்துதல் நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 28.12.2020 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பல்வேறு துறைகளின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர் பாதுகாப்பு மற்றும் கட்டுப்படுத்துதல் நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலி காட்சி மூலமாக ஆய்வு செய்தார்கள். இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய், பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. J. K. திரிபாதி, இ.கா.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் 17.12.2020 அன்று பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட மகளிர் சுய உதவிக் குழுவினருடன் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள், பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்து மடல்!

சுய உதவிக் குழு மகளிருக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆங்கில புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்து மடல்களை கோயம்புத்தூர் மாவட்டம், குனியமுத்தூரில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் 12.01.2021 அன்று வழங்கினார்.

இவ்விழாவில் பன்னிரெண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக தலா பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. பாரத பிரதம மந்திரி தெருவோர வியாபாரிகளுக்கான கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் ஐந்து தெருவோர வியாபாரிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபாயும், குனியமுத்தூரில் உள்ள அன்னை தெரசா மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வங்கி நேரடி கடனாக ரூபாய் பத்து லட்சமும், வசந்தம் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு ரூபாய் இரண்டு லட்சமும் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் கோயமுத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கு. இராசாமணி, இ.ஆ.ப., மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர் திரு. கு. செல்வராஜ் மற்றும் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன், கூட்டமைப்புக்கு பெருங்கடன் மற்றும் அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்குதல்

கோயம்புத்தூர் மாவட்டம், சூலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சூலூர் பேரூராட்சி புதிய பேருந்து நிலையம் துவக்க விழாவில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், அம்மா இருசக்கர வாகன மானியத் திட்டத்தின் கீழ் 11 பயனாளிகளுக்கு ரூ. 25,000/- வீதம் 2.75 இலட்சமும், பாரதப் பிரதமரின் PM-SVANidhi திட்டத்தின் கீழ் ரூ.10,000/- வீதம் 8 தெருவோர வியாபாரிகளுக்கு ரூ.80,000/-மும், இரண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடனுதவியாக ரூ.5.50 இலட்சமும் வழங்கினார்.

தொடர்ந்து இடையபாளையம் ஊராட்சி மன்ற புதிய அலுவலக கட்டிடத்தைத் திறந்து வைத்த மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள் இடையபாளையம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புக்கு பெருங்கடனாக ரூ.53.50 இலட்சத்திற்கான அனுமதி ஆணை வழங்கினார்.

இந்நிகழ்ச்சிகளில் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் கு. இராசாமணி, இ.ஆ.ப., அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் பிரதிநிதிகள், கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கு. செல்வராசு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாநிலம் முழுவதும் கொரோனா பெருந்தொற்று காலத்தில் 1.08 இலட்சம் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.1267 கோடி வங்கி கடனுதவி வழங்கப்பட்டுள்ளது

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள் தகவல்

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, குடிநீர் வடிகால் வாரியம், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள், கொரோனா தடுப்பு மற்றும் வடகிழக்கு பருவமழை நிவாரணப் பணிகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் 15.12.2020 அன்று சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள், "கொரோனா பெருந்தொற்று காலத்தில் அறிவிக்கப்பட்ட ஊரடங்கினால் பொதுமக்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் சார்பாக பல்வேறு விதமான நலத்திட்டங்களையும், சிறப்பு நிதியுதவிகளையும் வழங்கினார்கள். குறிப்பாக கொரோனா காலத்தில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு சிறப்பு கடனுதவியை மாண்புமிகு அம்மாவின் அரசு வழங்கியுள்ளது. கொரோனா பெருந்தொற்று காலத்தில் மாநிலம் முழுவதும் 1,07,933 மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு ரூ.1,266.66 கோடி சிறப்பு கடனுதவி வழங்கப்பட்டுள்ளது" என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையாளர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் டாக்டர் கே.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் சி.என்.மகேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள், பேரூராட்சிகள் இயக்குநர் திரு. எஸ்.பழனிசாமி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன செயல் இயக்குநர் திருமதி. ஜெ.யு.சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய செயல் இயக்குநர் டாக்டர் த. பிரபு சங்கர், இ.ஆ.ப., அவர்கள், கூடுதல் இயக்குநர்கள் மற்றும் தலைமைப் பொறியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம்

பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாகம், பேரூராட்சிகள், சென்னை குடிநீர் வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் தலைமையில் 21.12.2020 அன்று செனாய் நகரில் உள்ள அம்மா அரங்கத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் அவர்கள், “தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 25.95 இலட்சம் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.79,442 கோடி வங்கிக் கடன், 1,67,057 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.15,000/ வீதம் ரூ.211.39 கோடி ஆதார நிதி, 8,269 கிராம வறுமை ஒழிப்பு சங்கங்களுக்கு ரூ.419.67 கோடி நிதியுதவி, 93,452 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.442.23 கோடி சமுதாய முதலீட்டு நிதி, ரூ.24.35 கோடி மதிப்பீட்டில் பெண் விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதில் 28,800 பெண் விவசாயிகள் பயனடைந்துள்ளனர். மேலும், ரூ.704.35 கோடி மதிப்பீட்டில் அம்மா இருசக்கர வாகன திட்டத்தின்கீழ் 3 ஆண்டுகளில் 2,77,064 மகளிர் பயனடைந்துள்ளனர்” என தெரிவித்தார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு கூடுதல் தலைமை செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.கா.பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.த.ந.ஹரிஹரன், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் முனைவர் சி.என்.மகேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள், பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.எஸ்.பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையாளர்கள், மாநகராட்சி ஆணையாளர்கள், நகராட்சி நிர்வாக துறையை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்குதல்

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் நகராட்சி, ஜே.கே.கே. நடராஜா திருமண மண்டபத்தில் 06.12.2020 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 3 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 11 இலட்சம் வங்கிக் கடனுதவியும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் சார்பில், பிரதம மந்திரியின் PM-SVANidhi திட்டத்தின் கீழ் தலா ரூ. 10 ஆயிரம் வீதம் 5 தெருவோர வியாபாரிகளுக்கு ரூ. 50 ஆயிரம் கடனுதவியையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கா. மெகராஜ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்குதல்

திருவாரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 16.12.2020 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், பணிபுரியும் பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 120 மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியமாக 30 லட்சம் ரூபாயினை மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் திரு. ஆர். காமராஜ் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி வே. சாந்தா, இ.ஆ.ப., அவர்கள், திருவாரூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி ஸ்ரீலேகா அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் 09.12.2020 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள், தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்டம் சார்பில், உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 69 மகளிருக்கு மானியமாக ரூ.17,25,000/- மற்றும் ஸ்ரீவைகுண்டம் ஊராட்சி ஒன்றியம், மாரமங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வங்கி பெருங்கடனாக ரூ.17,00,000/- வழங்கி விழா பேருரையாற்றினார். இவ்விழாவில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே. செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள், திருவைகுண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். பி. சண்முகநாதன் அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி பி. ஜே. ரேவதி அவர்கள், உதவி திட்ட அலுவலர் திருமதி ச. பிரேமா மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் 02.12.2020 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை அமைச்சர் திரு. கே. சி. வீரமணி அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் 120 மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனங்கள் வாங்க மானியமாக ரூ.30 இலட்சமும், மூன்று ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ. 1.10 கோடி பெருங்கடனும் மற்றும் 436 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ. 25.36 கோடி வங்கிக் கடனுதவிகளையும் வழங்கினார்.

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. திரு. ம. ப. சிவன் அருள், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், திருப்பத்தூர் மாவட்ட சார் ஆட்சியர் திருமதி வந்தனா கார்க், இ.ஆ.ப., திருப்பத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் டாக்டர் எஸ். உமாமகேஷ்வரி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. த. மகேஷ்பாபு, ஊராட்சிகளின் உதவி இயக்குநர் திரு. அருண், உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்குதல்

கரூர் மாவட்டத்தில் 03.12.2020 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பணிபுரியும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் வாங்க மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் 365 மகளிருக்கு ரூ. 91 இலட்சம் மானியத்தினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. எம். ஆர். விஜயபாஸ்கர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி சு. மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள், கரூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திருமதி ம. வாணி ஈஸ்வரி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி சுப்ரமணியர் சாஸ்திரியார் மேல்நிலைப் பள்ளியில் 13.12.2020 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா நடைபெற்றது. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் 164 உழைக்கும் மகளிருக்கு ரூ. 41 லட்சம் மதிப்பில் மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கி விழாப் பேருரையாற்றினார். இவ்விழாவில் செய்யார் சட்டமன்ற உறுப்பினர் திரு. தூசி மோகன், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பெ.சந்திரா அவர்கள், மாவட்ட போக்குவரத்து அலுவலர் திரு. ஜெயராமன் அவர்கள், மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், களப் பணியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 18.12.2020 அன்று மாண்புமிகு ஊரக தொழில்துறை அமைச்சர் திரு. பா.பென்ஜமின் அவர்களின் தலைமையிலும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி மகேஸ்வரி ரவிகுமார், இ.ஆ.ப., அவர்களின் முன்னிலையிலும் அரசு நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இவ்விழாவில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஒரு மகளிர் சுய உதவிக் குழுவிற்கு நேரடி வங்கி கடன் இணைப்பாக ரூ.10 இலட்சம் நிதி உதவியும் மற்றும் பணிபுரியும் மகளிருக்கு அம்மா இரு சக்கர வாகனத் திட்டத்தின் கீழ் 25 பயனாளிகளுக்கு ரூ.25,000 வீதம் ரூ.6.25 இலட்சம் மானிய உதவியும் மேலும் வாகனம் வாங்கிட 300 நபர்களுக்கு உத்தரவும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. ஸ்ரீனிவாசராவ், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) திரு. நாராயணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்து மடல்!

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆங்கில புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்து மடல்களையும், இரண்டு கூட்டமைப்புகளுக்கு பெருங்கடனாக ரூ.40 இலட்சமும், ஐந்து ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு காய்கறி விதைகள் மற்றும் பழக் கன்றுகளையும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.பா, அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வின்போது, தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., தென்காசி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி பா. விஜயலட்சுமி மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டம் குறித்த ஆய்வுக் கூட்டம்

மத்திய அரசின் தேசிய இயக்க மேலாண்மை அலகின் சார்பாக, தேசிய ஊரக பொருளாதார புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 17.12.2020 அன்று சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலைமையகத்தில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் தேசிய ஊரக புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாடுகள், முன்னேற்றங்கள் மற்றும் சாதனைகள் குறித்து காணொலி வாயிலாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் கூடுதல் இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆங்கிலப் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்து மடல்!

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆங்கில புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்து மடல்களை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.பா, அவர்கள் வழங்கினார். இந்நிகழ்வின்போது, திருநெல்வேலி மாவட்ட சார் ஆட்சியர் திரு. சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. ஆ. பெருமாள், திருநெல்வேலி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு மைக்கேல் அந்தோனி பெர்னாண்டோ மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் 13.12.2020 அன்று தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்டத்தின் வழிகாட்டுதலில், முத்தையாபுரம், சுந்தர் நகர் சமுதாய நலக் கூடத்தில் செயல்படும் ரோஜா மாநகராட்சி மகளிர் சுய உதவிக் குழுவின் ஸ்டார் பேப்பர் தட்டு உற்பத்தி அலகினைப் பார்வையிட்டு, அங்கு உற்பத்தி செய்யப்படும் பேப்பர் தட்டுக்களின் தரம், விற்பனை வாய்ப்பு, உற்பத்தி முறைகள் ஆகியவற்றை ஆய்வு செய்து, உற்பத்தி மற்றும் விற்பனையினை மேம்படுத்துவது தொடர்பாக ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்வின்போது தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கி. செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்ட இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திருமதி பி.ஜே. ரேவதி அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரக பெருவளாகத்தில் உள்ள ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி வளாக கட்டிட மன்றக் கூடத்தில், திருவண்ணாமலை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக/ நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் ஊரக புத்தாக்க திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படும் வட்டாரங்களில் திட்டப் பணிகளை 23.12.2020 அன்று தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு செய்தார்.

தொடர்ந்து தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மூலம் 25 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.125.05 லட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளையும், தெருவோர வியாபாரிகள் 7 பேர்களுக்கு தலா ரூ.10,000/- வீதம் ரூ. 70,000/- கடனுதவியும் வழங்கிய செயல் இயக்குநர் அவர்கள், தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல் யோஜனா (DDU-GKY) திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்புடன் கூடிய தொழில் பயிற்சி பெற செல்லும் 15 இளைஞர்களை வாழ்த்தி வழியனுப்பி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. அமீத்குமார், இ.ஆ.ப., திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி பெ. சந்திரா, NULM மாநில இயக்க மேலாளர் திரு. N. நித்யானந்தம், உதவித் திட்ட அலுவலர்கள், ஊரக புத்தாக்கத் திட்டத்தின் அலுவலர்கள் மற்றும் களப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் ஊரக புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் ஆய்வு மற்றும் கலந்துரையாடல்

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் ஊரக புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் 24.12.2020 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் / தமிழ்நாடு ஊரகப் புத்தாக்கத் திட்டத்தின் தலைமை செயல் அலுவலர் (பொ) முனைவர். ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்ததுடன், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர்கள் மற்றும் ஊரக புத்தாக்கத் திட்ட இளம் வல்லுநர்கள், செயல் அலுவலர்கள், வட்டார அணி தலைவர்கள், திட்ட செயலாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடல் மேற்கொண்டு மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் இயக்குநர் திரு. வெ. மகேந்திரன், விழுப்புரம் மாவட்ட ஊரக புத்தாக்கத் திட்ட செயல் அலுவலர் திரு.எஸ்.ராஜேஷ், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் ESTP Specialist திரு. நித்தியானந்தம் ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

பழங்குடியினருக்கான ஆடையகம் மற்றும் உற்பத்தி நிறுவனம் துவக்க பயிற்சி

திருவண்ணாமலை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் திருவண்ணாமலை வட்டாரம், மேலத்திகான் ஊராட்சியில் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடையும் பொருட்டு பழங்குடியினருக்கான ஆடையகம் மற்றும் உற்பத்தி நிறுவனம் ஏற்படுத்துவதற்கான துவக்கப் பயிற்சியை 24.12.2020 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திருமதி பெ.சந்திரா, உதவித் திட்ட அலுவலர்கள் திருமதி ஸ்ரீபாரதி, திருமதி பெர்லினா, வட்டார மேலாளர் மற்றும் பணியாளர்கள், மேலத்திகான் ஊராட்சியை சார்ந்த பயிற்சி பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கொரோனா தொற்று பரவல் தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்பு

நீலகிரி மாவட்டம் ஏடிசி காந்தி திடலில் கொரோனா தொற்று நோய் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 01.12.2020 அன்று நடைபெற்றது. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், முதன்மை செயலாளர் / இன்கோசர்வ் தலைமைச் செயல் அலுவலர் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி. சுப்ரியா சாஹூ, இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்து, கொரோனா தொற்று பரவல் தடுப்பு விழிப்புணர்வு குறித்து சிறப்புரையாற்றினார்.

தொடர்ந்து மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணியாற்றும் பணியாளர்களுக்கு கொரோனா தொற்று நோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் சம்மந்தப்பட்ட ஊராட்சி செயலாளர்களிடம் கொரோனா தொற்று நோயிலிருந்து எவ்வாறு தங்களை பாதுகாத்து கொள்ள வேண்டும் என்பது குறித்த துண்டு பிரசுரங்கள் மற்றும் விழிப்புணர்வு போஸ்டர்கள் வழங்கப்பட்டன.

பின்னர் கொரோனா தொற்று நோய் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மகளிர் திட்டம் மூலம் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நாடகம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து கொரோனா தொற்று விழிப்புணர்வு உறுதிமொழியினை பொதுமக்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், நீலகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. பி. பாபு, உதவித் திட்ட அலுவலர்கள், களப்பணியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் கீழ் மானியம் வழங்குதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், 23.12.2020 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள், உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு மானிய விலையில் இருசக்கர வாகனங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. வே. பிச்சை, உதவித் திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வேலூர் மாவட்டம்

பரிசு பொருட்கள் தயாரிக்கும் ஸ்ரீ நாராயணி பெண்கள் சுய உதவிக் குழு

வேலூர் மாநகராட்சி, அரியூர் பகுதியில் ஸ்ரீ நாராயணி பெண்கள் சுய உதவிக் குழு நினைவு மற்றும் பரிசு பொருட்கள் தயாரிப்பில் சிறந்து விளங்குகின்றனர். இக்குழு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் முதல் வங்கி இணைப்பின் மூலமாக ரூ. 1.5 லட்சம் மற்றும் நபார்டு வங்கியின் மூலமாக ரூ. 6 லட்சம் கடனுதவி பெற்று இத்தொழிலை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகின்றனர். இவர்களுக்கு ரோட்டரி கிளப், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து வியாபார ஆணைகள் கிடைக்கின்றன. இவர்கள் தயார் செய்யும் கைவினைப் பொருட்கள், நினைவுப் பரிசுகள், நினைவுக் கோப்பைகள், அன்பளிப்புப் பொருட்கள் ஆகியவற்றை தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா மற்றும் சூரத் போன்ற இடங்களுக்கு மொத்தமாக அனுப்பி விற்பனை செய்து வருகின்றனர். வாடிக்கையாளர்கள் விருப்பத்திற்கு ஏற்ப தயார் செய்யப்பட்டு, பொருட்களுக்கு ஏற்றவாறு விலைகள் நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

இவர்கள் தயாரிக்கும் பொருட்களை வியாபாரம் செய்வதற்கு நகர்ப்புற வாழ்வாதார மையத்தின் மூலமாக பூமாலை வணிக வளாகத்தில் கடை ஒன்று அமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. சண்முகசுந்தரம், இ.ஆ.ப., அவர்கள் ஸ்ரீ நாராயணி பெண்கள் சுய உதவிக் குழுவினர் தயாரிக்கும் பொருட்களைப் பார்வையிட்டு பொருட்களின் தயாரிப்பு மற்றும் விற்பனை குறித்த விபரங்களைக் கேட்டறிந்து மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது, வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஆ. ரா. சிவராமன் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

எங்கும் மகிழ்ச்சி...! எல்லாம் வளர்ச்சி...!

ஆணும் பெண்ணும் சமமாய் ஆன
காலம் இன்று வந்தது; – எங்கள்
ஆசைகள் கனவுகள் எல்லாம் பலிக்க
நெஞ்சில் இன்பம் பரவுது!
ஊரெங்கும் பரவிடும் மகளிர் குழுக்கள்
பெண்களின் வளர்ச்சியைச் சொல்லுது: – அவை
பெருமிதத்தோடு கம்பீரமாக
முன்னேற்றப் பாதையில் செல்லுது...!

மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தான்
எங்கள் அறியாமை இருளைத் துடைத்தது;
அச்சம், வெட்கம் தாழ்வு குணங்களைப்
படிப்படியாகத் தகர்த்தது!
மகளிர் குழுவாய் ஒன்றாக இணைத்துப்
பலவிதப் பயிற்சிகள் தந்தது; – எங்கள்
திறமையை வளர்த்து நம்பிக்கை கொடுத்து
ஊரெங்கும் குழுக்கள் அமைத்தது...!

முப்பத்தேழு ஆண்டுக்கு பின்பும்
தொடரும் சாதனைப் பணிகள்;
மகளிர் மேம்பாட்டு நிறுவனத் திட்டங்கள்
அரசின் மகுடத்தில் மணிகள்...!
எளியோர் நலிந்தோர் ஏற்றம் பெற்றிட
மகளிர் குழுக்களே நல்ல தீர்வு; – அதைச்
சரியாய் நடத்தி வருங்காலத்திலும்
நிறுவனம் அடையும் உயர்வு...!

வறுமையிலிருந்து வளமிகு வாழ்வுக்கு
வழியைச் சொன்னது மகளிர் குழு; – எங்கள்
வெற்றிக்குத் தேவை ஒற்றுமை என்று
எடுத்துச் சொன்னது சுய உதவிக்குழு!
அரசின் சட்டங்கள் பயன்மிகு திட்டங்கள்
அறிய வைத்தது இந்த அருமைக்குழு;
பெண்கள் உரிமையைத் தெரிய வைத்து – அதன்
வலிமையைச் சொன்னது பெருமைக்குழு...!

எப்போதும் முன்னோக்கிப் பயணங்கள் தொடர்வோம் – இனி
ஏமாற்றம் ஒருபோதும் இல்லை! – எங்கள்
எழுச்சிக்கு ஆணுலகம் அன்போடு துணை நிற்க
மகிழ்ச்சிக்கு அளவேதும் இல்லை!
எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் நிறை
எல்லோரும் இந்நாட்டில் சமமே! – எங்கள்
முண்டாசுக் கவிஞனின் கவிதைக் கண்ட கனவு
இன்று பலித்தது நிஜமே...!

ஜா.சம்பத்,
கூடுதல் இயக்குனர் (திறன் வளர்ப்பு)
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

ஒரு சொல் கேளீர்...

அன்புள்ள சுய உதவி குழு சகோதரிகளுக்கு வணக்கம். உங்கள் மனதிற்கு மிகவும் பிடித்தமான மகளிர் மேம்பாட்டு நிறுவனம் உங்களின் வளர்ச்சியில் பன்னெடுங்காலமாக பங்காற்றி வருகிறது என்பதை அறிவோம். அப்பெருமைமிகு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் என்ற நிலையில் உங்களோடு இனி மாதந்தோறும் பேச விழைகிறேன்.

2021ஆம் ஆண்டு இனிதே மலர்ந்துள்ளது. நாம் கடந்து வந்த 2020ஆம் ஆண்டு எத்தகைய சவால்களைக் கொண்டிருந்தது என்பதைத் திரும்பிப் பார்க்கும் போது சற்றே மனம் கலக்கமடைகிறது. உலகத்தையே அச்சுறுத்திக் கொண்டிருக்கும் கொரோனா வைரஸ்ஸிடமிருந்து நாம் நம்மை காத்துக் கொண்டு நம்மைச் சுற்றியுள்ளவர்களையும் காத்து மீண்டு வந்துள்ளோம். இக்கடினமான காலகட்டத்தில் நமது அரசு எடுத்த பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளில் பங்கெடுக்கும் விதமாக நம் சுய உதவி குழு பெண்கள் இந்த நெருக்கடியான காலகட்டத்தில் கூட தங்களால் இயன்ற அனைத்து சேவைகளையும் இந்த சமுதாயத்திற்கு செய்து வந்துள்ளனர். நோய் தொற்றில் இருந்து மக்கள் தங்களை காத்துக் கொள்ள தேவையான முக கவசங்களையும் சானிடைசர் வகைகளையும் தாங்களே தயாரித்து வழங்கி வந்துள்ளனர். முக கவச தயாரிப்பில் தமிழ்நாட்டின் சுய உதவி குழுவினர் இந்தியாவிலேயே இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இத்தகைய பெருமைகளைக் கொண்ட நமது பெண்களிடம் ஒவ்வொரு மாதமும் ஒரு சில வார்த்தைகள் பகிர்ந்து கொள்ள இருக்கிறேன்.

பெண்ணாகப் பிறந்தவள் தன்னையும் காத்து, தன்னைச் சுற்றியுள்ளவர்களையும் காத்திடும் தனித்திறமை கொண்டவள். “**நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த நன்னடையும் நானிலத்தில் யார்க்கும் அஞ்சா செருக்கும் கொண்டவள் பெண்**” என்று மகாகவி பாரதியார் நம்மை பெருமைபட பாடியுள்ளார்.

வீட்டை விட்டு வெளியே வருகையில் ஒரு பெண் எவ்வகையில் இச்சமூகத்தை எதிர்கொள்ள வேண்டும் என்பது குறித்து நாம் விரிவாக பேசலாம். ஒவ்வொரு மாதமும் ஒரு தலைப்பில் நாம் பேசலாம். வீட்டை விட்டு வெளியே வந்து தனக்காகவும், தன்னைச் சுற்றியுள்ளவர்களுக்காகவும் பல நற்பணிகளைச் செய்ய முற்படும் ஒரு பெண்ணானவள் மனதிலே தன்னம்பிக்கை கொண்டிருக்க வேண்டும். தன்னம்பிக்கை என்பது நம் எண்ணத்திலே வர வேண்டும். உள்ளத்தில் ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாம்’ என்ற தமிழ் மொழிக்கேற்ப ஒரு பெண்ணுக்கு இருக்கும் தன்னம்பிக்கை அவளுடைய பேச்சிலும் செயலிலும் வெளிப்பட வேண்டும்.

தன்னம்பிக்கை உள்ள ஒரு பெண் தன்னிகரில்லா பெண்ணாவாள். தன்னம்பிக்கையோடு, நேர்மையையும் கைக்கொண்டு யார்க்கும் அஞ்சா துணிவோடு, சமூக அக்கறையோடு வலம் வரும் பெண்ணானவள் இந்த சமூகத்தின் ஒளிவிளக்கு. இந்த சமூகம் பல நேர்வுகளில் அவளை நம்பியே உள்ளது. அத்தகைய பெண்களை உள்ளடக்கிய இயக்கம் தான் நமது சுய உதவி குழு இயக்கம். சுய மரியாதையோடு, சுய சிந்தனையோடு, சுய ஒழுக்கத்துடன் சுய உதவிடும் இப்பெண்களே இந்த நாட்டின் உந்து சக்திகள். வீட்டையும் கவனித்துக் கொண்டு சமூக மேம்பாட்டிற்காகவும் உழைக்கும் இவர்கள் தங்களை எவ்வாறு இன்னமும் மெருகேற்றிக் கொள்ள முடியும், மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பது குறித்து என் அனுபவத்தின் மூலமாக நான் அறிந்தவற்றை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். பற்பல தலைப்புகளில் இனிவரும் மாதங்களில் பேசுவோம்.

பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
சென்னை.

சேலம் மாவட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நடைபெறும் வேலைவாய்ப்புடன் கூடிய தொழிற்பயிற்சிகள் ஆய்வு

சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. சேலம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் / திட்ட இயக்குநர் திரு. ந. அருள்ஜோதி அரசன் அவர்களின் ஆலோசனையின்படி, திறன் மேம்பாட்டு பயிற்சிகளின் செயல்பாடுகளைப் பார்வையிடுவதற்காக மாநில திட்ட மேலாளர் திரு. எஸ். நித்தியானந்தம் (S&P) அவர்கள் வருகை புரிந்தார்.

ஆய்வில் முதலாவதாக பேளூர் பேரூராட்சியில் ஜெய்ராம் எஜூகேஷனல் டிரஸ்ட் மூலமாக நடைபெற்று வரும் மொபைல் போன் ஹார்ட்வேர் ரிப்பேர் டெக்னிஷியன் பயிற்சியின் தேர்வு மற்றும் மதிப்பீடுகள் ஆய்வு செய்யப்பட்டது. தொடர்ந்து சேலம் மாநகராட்சிக்குட்பட்ட அம்மாபேட்டை, அஸ்தம்பட்டி மற்றும் சூரமங்கலம் ஆகிய மண்டலங்களில் பல்வேறு நிறுவனங்கள் மூலம் நடைபெற்று வரும் வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் பயிற்சிகளை பார்வையிட்டு பயிற்சியாளர்களிடம் பயிற்சிகள் குறித்து கலந்தாய்வு செய்யப்பட்டது.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார மாநில திட்ட மேலாளர் திரு. எஸ். நித்தியானந்தம் அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் குறித்தும், பயிற்சி நிறுவனங்கள் வழங்கக் கூடிய பயிற்சிகள் குறித்தும், பயிற்சி நிறுவனங்கள் மற்றும் சமுதாய அமைப்பாளர்களுடன் கலந்தாய்வுக் கூட்டம் நடத்தி திட்டத்தின் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்தார். இதற்கான ஏற்பாடுகளை உதவித் திட்ட அலுவலர் திரு. கே. முருகேசன் (TNULM) செய்திருந்தார்.

"உடலினை உறுதி செய்...!"

"தைப் பிறந்தால் வழி பிறக்கும்"
என்றொரு நம்பிக்கை என்றென்றுமிருக்க,
இந்த `தையோ'
இருமடங்கு நம்பிக்கையை எதிர்நோக்கி! – ஆம்,

வெள்ளமும், வறட்சியுமாய்
சூறாவளி மட்டுமின்றி, சுனாமி போன்ற
இயற்கைப் பேரிடரையும்
எளிதாய் எதிர்கொள்ளும்
நம்பிக்கை நம்மிடமிருந்தும்...

கொத்து கொத்தாய் செத்து மடிந்த
கொள்ளை நோய்கள் வரலாற்றை
மாற்றி எழுதிய மருத்துவமோ – இன்று
ஒவ்வொரு நாளும் உருமாறும்
கொரோனா பெருந்தொற்றை
வேரறுக்கும் விஞ்ஞானமின்றி
உலகே உருக்குலைந்த நிலையில்...

நமக்கோர் நம்பிக்கையாய்
நமது உணவு பழக்கங்களும்,
வாழ்வியல் முறைகளுமே – ஆம்...

உடலினை உறுதி செய்யும்
பாரம்பரிய அரிசி ரகங்கள், பழங்கள்
கீரை வகைகள், காய்கறிகளோடு,
சமைத்திடும் பாத்திரமாய் மண்பாண்டங்கள்...
தட்பவெப்ப சூழலிற்கேற்ப
செரிமான சிக்கல் தீர்க்கும் விரதமுறைகள் – என
பண்டைய வாழ்வியலை மீட்டெடுக்கும் வழிமுறையே
பெருந்தொற்றிற்கும் அருமருந்தாகும்!

உற்றார், உறவினர்,
பெற்றோர், பிள்ளைகளென
அனைவர் மீதும் அக்கறை செலுத்திடும்
உழைக்கும் மகளிர் அனைவருமே
தங்கள் ஆரோக்கியத்திலும்
கவனம் செலுத்தினால் மட்டுமே
வலிமையான சமுதாயமும்
வளமான வாழ்வும் சாத்தியமாகும்!

இனியொரு விதி செய்வோம்!
உடலும் உள்ளமும் வலிமை பெற்றிட
உள்ளூர் வளங்களையும்,
பண்டைய வாழ்வியலையும் பயன்படுத்துவோம்!

– **செந்தில் பலராமன்**, செயலர்,
தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் திருமதி விஜயலட்சுமி அவர்கள் விருதுநகர் மாவட்ட நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளை 28.12.2020 அன்று நேரடி ஆய்வு செய்த பின், அருப்புக்கோட்டை நகராட்சியில் செயல்படும் சுபதினம் பகுதி அளவிலான கூட்டமைப்பு (ALF) மூலம் ஆரம்பிக்கப்பட்ட நகர்ப்புற வாழ்வாதார மையத்தை (CLC) திறந்து வைத்தார்.

பின்பு அருப்புக்கோட்டை நகராட்சி ஆணையர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் PM-SVANidhi திட்டத்தின் கீழ் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மூலம் 22 தெருவோர வியாபாரிகளுக்கு ரூ.10,000/ வீதம் கடன் உதவி வழங்கினார். தொடர்ந்து தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்பட்டு வரும் சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தை பார்வையிட்ட இணை இயக்குநர், அங்கு பயிற்சி பெற்று வருபவர்களிடம் பயிற்சி குறித்த விபரங்களைக் கேட்டறிந்ததுடன், “தமிழ்நாடு அரசின் வழிகாட்டுதலில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் நடத்தப்படும் பயிற்சியின் மூலம் தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும்’’ என்று அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்வுகளின் போது, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மாநில வல்லுநர்கள் திரு.மணிராஜ், திரு. சுபாஷ் பாபுநாத் மங்களம் ஆகியோர் உடனிருந்தனர்.

இராமநாதபுரம் மாவட்டம்

நவரத்னா சுய உதவிக் குழுவின் சிறுதானிய உணவு உற்பத்தி

உடல் நலத்திற்கு ஏற்ற சிறுதானிய உணவுகளை தயாரித்து விற்பனை செய்யும் நவரத்னா சுய உதவிக் குழுவின் வெற்றிக் கதையை அக்குழுவின் உறுப்பினர்கள் சொல்லக் கேட்போம் வாருங்கள். “எங்களது நவரத்னா குழு 12 உறுப்பினர்களுடன் 2013ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.

எங்கள் குழுவின் உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து சிறுதானியங்களில் சத்து மாவு உள்பட பல்வேறு விதமான மாவு வகைகளைத் தயாரித்து அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளுக்கு விற்பனை செய்தோம். நாங்கள் தயாரிக்கும் பொருட்களின் தரத்தைப் பார்த்து அன்றைய மகளிர் திட்ட அலுவலர் திருமதி பூங்குழலி அவர்கள் பாராட்டியதுடன், எங்கள் மாவட்டத்தில் நடைபெற்ற புத்தக திருவிழாவில் ஸ்டால் அமைப்பதற்கு அந்நாளைய ஆட்சித் தலைவர் திரு. நந்தகுமார், இ.ஆ.ப., அவர்களிடம் எங்களுக்கு அனுமதி பெற்றுத் தந்தார்.

நாங்கள் எங்கள் தொழிலை மேலும் விரிவுபடுத்தும் நோக்கத்துடன் மாவட்ட தொழில் மையம் (DIC)ல் 2015-2016ஆம் ஆண்டு 10 லட்சம் ரூபாய் கடன் பெற்று, வறுக்கும் இயந்திரம், அரைக்கும் இயந்திரம், பேக்கிங் இயந்திரம், சீலிங் இயந்திரம், எடைபார்க்கும் இயந்திரம் ஆகியவற்றை வாங்கி சிறப்பான முறையில் செயல்பட்டோம்.

மகளிர் திட்ட அலுவலர் திரு. ஜெயராமன் அவர்கள் எங்களுக்கு மானியத்துடன் கூடிய மின் இணைப்பு பெற்றுத் தர ஏற்பாடு செய்தார். அடுத்தடுத்த ஆண்டுகளில் மகளிர் திட்டத்தின் மூலம் நடந்த விற்பனைக் கண்காட்சிகளில் ஸ்டால் அமைக்க எங்களுக்கு முன்னுரிமை தரப்பட்டது. Fssai, Nutritional Value, Barcode Branding என அடுத்த நிலைக்கு முன்னேறி, இன்று நாங்கள் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு எங்களது தகுதியினை உயர்த்தி உள்ளோம். எங்கள் குழுவிற்கு பல்வேறு அமைப்புகள் மூலம் விருதுகள், பாராட்டுகள் கிடைத்தன. நாளிதழ்களிலும் எங்களின் செயல்பாடுகள் குறித்து கட்டுரை வெளியாகியுள்ளன. பல்வேறு உணவுப் பொருட்கள் தயாரிப்பு குறித்து KVK (KRISHI VIGYAN KENDRA) நடத்திய 21 நாட்கள் பயிற்சி வகுப்பில் எங்கள் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு, பல்வேறு உணவுப் பொருட்கள் தயாரிப்பு குறித்து அறிந்து கொண்டனர். இதற்காக கோயமுத்தூர், தஞ்சாவூர் மற்றும் மதுரை பல்கலைக் கழகங்களிடம் சான்றிதழ்கள் பெற்றுள்ளோம். இது தவிர தீபாவளி, ரம்ஜான் போன்ற விழா காலங்களில் நாங்கள் தயாரித்து வழங்கும் தின்பண்டங்கள் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளன.

இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாக நம் மாவட்டத்தில் நடைபெற்ற மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவில் நம் மகளிர் திட்டம் மூலம் விற்பனை அரங்கு அமைக்க வாய்ப்பு கிடைத்தது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும் எங்களுடைய விற்பனை அரங்கிற்கு வருகை தந்து எங்களின் தயாரிப்புப் பொருட்களை பார்வையிட்டு பாராட்டிய நிகழ்வு மறக்க முடியாததும், எங்களுக்கு பெருமை தருவதாகவும் அமைந்தது.

நவரத்னா சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஒற்றுமையுடனும், நாம் தயாரிக்கும் பொருட்கள் எக்காலத்திலும் தரமானதாகவும், நம் சமுதாயத்திற்கு ஆரோக்கியம் கொடுப்பதாகவும், நாட்டிற்கு ஏற்புடையதாகவும் அமைய வேண்டும். மேலும் சமுதாயத்திற்கு முன்னுதாரணமான பெண்கள் குழுவாக இருப்போம் என்று உறுதி கூறுவதுடன், எங்களின் செயல்பாட்டிற்கு தொடர்ந்து உறுதுணையாக இருக்கும் தமிழ்நாடு அரசிற்கும், மகளிர் திட்டத்திற்கும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும் எங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று குறிப்பிட்டனர்.

தேனி மாவட்டம்

வாழ்வில் வளம் தந்த இயக்கம்

என் பெயர் எம். முத்து மீனா, போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் வசித்து வரும் நான், எங்கள் பகுதியில் செயல்பட்டு வரும் ஸ்ரீ செந்தாமரை மகளிர் சுய உதவிக் குழுவில் ஊக்குநராக செயல்பட்டு வருகிறேன். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் போடிநாயக்கனூர் நகராட்சியின் சமூக அமைப்பாளர் என்னை சந்தித்து சமூக வள பயிற்றுநர் குறித்து விளக்கினார். சுய உதவிக் குழுவில் எனக்கு இருந்த அனுபவத்தால் சமூக வளப் பயிற்றுநராக ஆர்வத்துடன் இணைந்து கொண்டேன்.

எனது வார்டில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மக்களை ஒருங்கிணைத்து அவர்களைக் கொண்டு 10 சுய உதவிக் குழுக்களை உருவாக்கினேன். பிறகு, அவர்களுடைய திறன் வளர்ப்பிற்காக ஊக்குநர், பிரதிநிதி மற்றும் உறுப்பினர் பயிற்சி அளித்தேன். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அனைத்து குழுக்களுக்கும் சுழல் நிதியாக ரூ. 10,000/- கிடைப்பதற்கு உதவினேன். மேலும், வங்கி மூலம் நேரடி கடன் பெறுவதற்கும் உறுதுணையாக இருந்தேன்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்க அலுவலர்கள் உதவியோடு தனிநபர் கடன் திட்டத்தின் மூலம் யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் தொழில் துவங்குவதற்கு 15.09.2020 அன்று ரூ. 2,00,000/-ஐ பெற்று, எங்கள் பகுதியில் செயல்படும் சந்தையில் எண்ணெய் கடை துவங்கினேன். மேற்கண்ட தொழில் மூலம் தினசரி ரூ. 500/- வரை வருவாய் பெற்று வந்தேன். மேலும் மகளிர் சுய உதவிக் குழுக் கடன் பெற்ற பின் மேற்கண்ட தொகையின் மூலம் எனது குடும்பத்தின் வருவாயை பெருக்க எனது தொழிலுக்கு தேவையான கூலி ஆட்களை வைத்து, பயிறு வகைகளை கொள்முதல் செய்து, நல்லெண்ணெய், கடலை எண்ணெய் மற்றும் இலுப்பை எண்ணெய் ஆகியவற்றை விற்பனை செய்து வருகிறேன். தற்போது எனக்கு தினசரி ரூ. 1,000/- முதல் ரூ. 2,000/- வரை வருவாய் கிடைக்கிறது. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்திய தமிழ்நாடு அரசுக்கும், மகளிர் திட்டத்திற்கும் எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம்

வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு மற்றும் பணியமர்வு பயிற்சி

எனது பெயர் கோ. பிரேமா (த/பெ. கோவிந்தராசு), கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் நகராட்சி, பெரிய கண்டியாங்குப்பம் கிழக்கு தெருவில் வசித்து வரும் நான், பன்னிரெண்டாம் வகுப்பு வரை படித்து வேலை வாய்ப்பு இல்லாமல் வீட்டில் இருந்தேன். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் பணி புரியும் சமுதாய அமைப்பாளர்கள் வாயிலாக இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்பு பயிற்சி அளிப்பது பற்றி தகவல் அறிந்து விருத்தாசலத்தில் நடைபெறும் Manual Metal Arc Welding / Shielded Metal Arc Welding welder பயிற்சியில் சேர்ந்து பயிற்சி பெற்று வருகிறேன்.

ஆண்கள் மட்டுமே வெல்டிங் செய்யும் பணியினை செய்து வருகின்றனர். மேலும் பெண்களாலும் இப்பணியினை செய்ய முடியும் என்ற நோக்கத்திற்காக நான் இப்பயிற்சியை விரும்பி தேர்வு செய்து பயிற்சி பெற்று வருகிறேன். பயிற்சி முடித்த பின்பு இப்பணியினை மேற்கொண்டு இதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை கொண்டு எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்வேன்.

பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை ஊட்டும் வகையில் எனக்கு வெல்டிங் பயிற்சி பெற கிடைத்த வாய்ப்பை முழுமையாக பயன்படுத்தி பயன் பெறுவேன் என்பதை தெரிவித்துக் கொண்டு, இந்த வாய்ப்பளித்த தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோ. பிரேமா

பெரிய கண்டியாங்குப்பம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி

எனது பெயர் வாசுகி (க/பெ. செல்வராஜ்) நான் சீர்காழி நகராட்சி அலுவலகம் அருகில் சாலையோரத்தில் பூக்கடை வைத்துள்ளேன். பூக்கடை நடத்துவதற்கு தனியாரிடம் அதிக வட்டிக்கு கடன் வாங்கி சிரமப்பட்டேன். இந்நிலையில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலின்படி தற்போது PM-SVANidhi திட்டத்தின் மூலம் இந்தியன் வங்கி, சீர்காழி கிளையில் ரூ.10,000/- கடன் பெற்று கடை நடத்தி வருகிறேன். நாள் ஒன்றுக்கு ரூ.2000/-க்கு வியாபாரம் செய்வதன் மூலம் ரூ. 700/- வரை இலாபம் கிடைக்கிறது. இது என் குடும்பத்திற்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இனி நான் தனியாரிடம் அதிக வட்டிக்கு கடன் வாங்க மாட்டேன் என்று உறுதியளிக்கிறேன். இந்தக் கடனை நல்ல முறையில் திரும்ப செலுத்தி விட்டு அடுத்த கடன் பெற உள்ளேன். எனக்கு வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்வாதார வளர்ச்சி தந்த இயக்கம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 28, வெட்டூரணிமடம் பகுதியில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 20 மகளிர் ஒருங்கிணைந்து மிஸ்பா மகளிர் சுய உதவிக் குழுவினை 14.06.2020 அன்று துவக்கினர். இந்த சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களான 6 பெண்கள் இணைந்து குழுவின் சேமிப்புத் தொகையிலிருந்து உள்கடனாக ரூ.20,000/- பெற்று குடிசை தொழிலாக “மிஸ்பா ஊறுகாய்” என்ற சிறு தொழிலை துவக்கினர்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் வட்டி மானியத்துடன் கூடிய சுய தொழில் முனையும் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக் கடன் திட்டத்தின் கீழ் வெட்டூரணி மடம் கிளை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலமாக ரூ. 2,00,000/- கடனாக பெற்று தற்போது நார்த்தங்காய், எலுமிச்சை, பூண்டு மற்றும் மாங்காய் என நான்கு வகையான ஊறுகாய்களை தயார் செய்கின்றனர்.

இவர்களது தயாரிப்பில் உருவான ஊறுகாய்களை உள்ளூர் சந்தைகள், சிறு கடைகள் மற்றும் மகளிர் திட்டஅலுவலகம் மூலமாக நடைபெறும் கண்காட்சிகளில் சந்தைப்படுத்தி வருகின்றனர். தற்போது இவர்கள் தயாரிக்கும் மிஸ்பா ஊறுகாய் விற்பனையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு, குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரமும் வளர்ச்சியடைந்து வருகிறது.

“சமுதாயத்தில் தங்களை அடையாளப்படுத்தி, தங்களது வாழ்வாதாரத்தை உயர்த்த வழிவகை செய்த மத்திய மாநில அரசுகளுக்கும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கும், மகளிர் திட்ட அலுவலகத்திற்கும் எங்களது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்” என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றனர்.

தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY)

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் மூலம் DDU-GKY, RSETI திட்டங்கள் ஆய்வு

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் DDU-GKY திட்ட இணைச்செயலாளர் (திறன்) திருமதி வீனா ஜோரி, இ.ஆ.ப., மற்றும் DDU-GKY இயக்குநர் திரு. வீரேந்திர சர்மா ஆகியோர் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் DDU-GKY திட்டப் பணிகளையும், ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்களின் (RSETI) பணிகளையும் பார்வையிட டிசம்பர் 2020ல் தமிழகம் வந்தனர்.

16.12.2020 அன்று கரூர் மாவட்டத்தில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் மூலம் தென்னிலை எனும் கிராமத்தில் நடைபெற்று வரும் பெண்களுக்கான 30 நாட்கள் தையல் பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். அங்கு பயிற்சி முடித்த பயனாளர்களிடம், பயிற்சியின் தரம், பயிற்சிக்குப்பின் எதிர்கால திட்டம், சுய வேலைவாய்ப்பின் அவசியம் போன்றவை குறித்து கலந்துரையாடினர்.

தொழிற்பயிற்சி முடித்த 21 பெண்களுக்கு பயிற்சி சான்றிதழ் வழங்கியதுடன், பெண்கள் சுய சார்புடன் வாழ எங்ஙனம் தொழிற்பயிற்சி உதவிடும் என்பதை விளக்கினர். மேலும், RSETI-ல் பயிற்சி முடித்தோர் அங்கு அமைத்திருந்த கைவினைப் பொருட்கள் கண்காட்சியினையும் பார்வையிட்டு பாராட்டு தெரிவித்தார்கள். இம்மையத்தில் “உன்னதி திட்டத்தில்” பயிற்சி முடித்த 7 பயிற்சியாளர்களிடம் கலந்துரையாடியதுடன், உன்னதி திட்டத்தின் கீழ் பயனாளிகள் தேர்வு குறித்தும் கேட்டறிந்தார்கள்.

தொடர்ந்து, திருப்பூர் மாவட்டம், வெள்ளக்கோவில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மேட்டுப்பாளையம் எனும் கிராமத்தில் நடைபெற்று வந்த இளைஞர் ஒருங்கிணைப்பு முகாமைப் பார்வையிட்டனர். சுமார் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்ட இம்முகாமில் NIFT/TEA நிறுவனத்தின் மூலம் திட்டம் குறித்து விளக்கமளிக்கப்பட்டது. முகாமில் தெரிந்து கொண்ட தகவல்களை பிறருக்கும் பகிர்ந்து, DDU-GKY திட்டம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் எடுத்துரைத்தனர். மேலும், விருப்பமுள்ள இளைஞர்களை அருகாமையில் உள்ள DDU-GKY திட்ட பயிற்சி மையங்களுக்கு களப்பயணமாக அழைத்து செல்லலாம் எனவும் அறிவுறுத்தினார்கள்.

தொடர்ந்து, திருப்பூர் மாவட்டத்தில் NIFT/TEA நிறுவனத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் DDU-GKY பயிற்சி வகுப்புகளைப் பார்வையிட்டு, பயிற்சியாளர்கள் / பயிற்றுனர்களுடன் விவாதித்து பயிற்சியின் தரம் குறித்தும், வேலைவாய்ப்பு குறித்தும் இணைச்செயலாளர் கேட்டறிந்தார். DDU-GKY மையத்தில் நடைபெற்ற வேலை நியமன ஆணை வழங்கும் விழாவில் கலந்து கொண்டு, 30 இளைஞர்களுக்கு நியமன ஆணைகளும், 20 இளைஞர்களுக்கு பயிற்சி சான்றிதழும் வழங்கினார்கள்.

பின்னர், மாணவர்களின் DDU-GKY திட்டம் குறித்த விழிப்புணர்வு கலைநிகழ்ச்சியைப் பார்வையிட்டு பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் NIFT/TEA அமைப்பின் முதன்மைப் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு, திருப்பூர் மாவட்டத்தில் தற்போதைய தொழிற்சாலைகள், வேலைவாய்ப்பு ஆகியன குறித்து இணைச்செயலர் அவர்களுக்கு எடுத்துரைத்தனர்.

நிறைவாக, கோவை மாவட்டம், கோயமுத்தூர் வெல்ஃபர் அசோசியேஷன் (CWA) பயிற்சி மையத்தைப் பார்வையிட்டு, பயிற்சி முடித்தவர்களுக்கான பயிற்சி சான்றிதழ், பணியில் அமர்த்தப்படுபவர்களுக்கான பணி நியமன சான்றிதழ்களை வழங்கி பாராட்டினர். NIFT/TEA மற்றும் CWA நிறுவனங்கள் மூலம் பயிற்சி முடித்த இளைஞர்களுக்கு 12க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்களில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, DDU-GKYன் முதன்மை இயக்கு அலுவலர் திரு. ஜே. கணேஷ் கண்ணா, மாநில திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன், கரூர், திருப்பூர், கோயமுத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனர்கள் முறையே திருமதி எம். வாணி ஈஸ்வரி, திரு. ஆர். கோமகன், திரு. செல்வராசு மற்றும் RSETI மாநில இயக்குநர் திரு. ஜி. ரங்கராஜன், மாநில மதிப்பீட்டு அலுவலர் திரு. ஜே. ஜோசப் ஆனந்தராஜ் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள், PIA நிர்வாகிகள் ஆகியோர் ஆய்வுக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

ஆய்வின்போது, குழுவினர் அளித்த பல்வேறு ஆலோசனைகள், DDU-GKY, RSETI பயிற்சிகளை தமிழகத்தில் மேலும் தரமானதாகவும், சிறப்பாகவும் செயல்படுத்திட பெரிதும் பயனுள்ளதாக அமைந்தது.

ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தில் (RSETI) பயிற்சி முடித்த பயனாளிகளுக்கு தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் (TNRTP) மூலம் தொழில் கடனுதவி வழங்குதல்

கடலூர் மாவட்டத்தில் செயல்பட்டுவரும் இந்தியன் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் கீழ் பல்வேறு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அங்ஙனம் பயிற்சி முடித்து சுய தொழில் மேற்கொள்ள விரும்பும் பயனாளிகளில் தகுதி வாய்ந்த நபர்களுக்கு வங்கிகள் மூலம் கடனுதவிகள் பெற்றிடவும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனம் (RSETI) பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டி வருகிறது.

மேலும், இப்பயிற்சி நிறுவனத்தில் போட்டோகிராபி மற்றும் வீடியோகிராபி, சணல் பை தயாரித்தல், செல்போன் பழுது நீக்கும் பயிற்சி, அகர்பத்தி தயாரித்தல் மற்றும் அழகு நகைகள் தயாரித்தல் போன்ற பயிற்சி முடித்தவர்களுக்கு, அவர்கள் சுய தொழில் தொடங்கவும், தொழிலை மேம்படுத்துவதற்காகவும் தலா ஒரு லட்சம் ரூபாய் வீதம் கடன் உதவி அளிக்கப்பட்டது.

05.01.2021 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் கொரோனா சிறப்பு நிதி உதவி தொகுப்பு மூலதன மானிய நிதியாக தலா ரூபாய் ஒரு லட்சம் வீதம் 21 பயனாளிகளுக்கு ரூ. 21 இலட்சத்திற்கான காசோலைகளை கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சந்திரசேகர சாகமுரி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. அகிலன், கடலூர் மாவட்ட ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மாவட்ட செயல் அலுவலர் திருமதி ராசாத்தி, இந்தியன் வங்கி ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் திருமதி ஜி. எஸ். சிந்துஜா மற்றும் பயிற்றுனர் திரு பாரதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் முதன்மை செயல் அலுவலர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் 08.12.2020 அன்று விழுப்புரம் மாவட்டம், தாமரைக்குளம் ஊராட்சியில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு நடத்தினார். அப்போது மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட அணியினரிடம் அடிப்படைத் தகவல்கள் எவ்வாறு மக்களிடமிருந்து சேகரிக்கப்படுகிறது என்ற விபரங்களைக் கேட்டறிந்தார்.

தொடர்ந்து பொதுமக்களிடம் திட்டத்தின் நோக்கம் மற்றும் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத்தின் (PGP) முக்கியத்துவம் குறித்து விளக்கியதுடன், வறுமை ஒழிப்பு என்பதையும் தாண்டி தொழில் முனைவோரை உருவாக்குதல் மற்றும் வேலைவாய்ப்பினை உருவாக்குதல் போன்றவையே ஊரக புத்தாக்கத் திட்டத்தின் முக்கிய நோக்கம் என்று முதன்மை செயல் அலுவலர் அவர்கள் கூறினார்.

“சிரமம் எங்களுக்கு தடை இல்லை”

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலமாக “மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டம்” தயாரிப்பதற்கான பயிற்சி கடந்த 20.11.2020 மற்றும் 21.11.2020 ஆகிய இரண்டு நாட்கள் வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சியில் கொடைக்கானல் மேல் மலை கிராமங்களான பூம்பாறை, மன்னவனூர், கூக்கால், பூண்டி மற்றும் வெள்ளகவி போன்ற ஊராட்சிகளில் இருந்து சமுதாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் சமூக வல்லுநர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சி குறித்து பயிற்சியாளர்கள் கூறும் போது, இப்பயிற்சியில் திட்ட அறிமுகம், திட்டத்தின் நோக்கம், திட்டத்தின் கூறுகள், திட்ட இலக்கு செயல்பாடுகள், வளம் கைபேசி செயலி பயன்படுத்துதல் ஆகியவை குறித்து விளக்கமாக பயிற்சி அளிக்கப்பட்டது. மிகுந்த ஆர்வமுடன் பயிற்சியில் கலந்து கொண்டு நன்றாகக் கற்றுக் கொண்டோம்.

கடந்த 26.11.2020 அன்று கொடைக்கானல் மேல்மலை கிராமமான பூம்பாறை ஊராட்சியில் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக கிராம முதலீட்டுத் திட்டம் உருவாக்குவதற்கான கணக்கெடுப்பு மற்றும் வளம் கைபேசி செயலியில் (Mobile app) தகவல்கள் பதிவு செய்தல் ஆகிய பணிகளை துவக்கினோம். இரண்டாம் நிலைத் தகவல்களை ஊராட்சி மன்ற அலுவலகம், கிராம வறுமை ஒழிப்பு சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு, விவசாயத் துறை மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோரிடம் சேகரித்தோம்.

பொதுவாக, கொடைக்கானலில் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவ மழையால் அதிக மழைப்பொழிவு இருக்கும். மேலும் நமது செயல்பாடுகளும் மேற்கண்ட மாதங்களிலே துவங்கி உள்ளது. நாங்கள் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சி திட்டப் பணிகளை துவக்கியபோது கடும் மழைப்பொழிவினை எதிர்கொண்டோம். தொடர்ச்சியான மழையால் மண் சரிவு, சாலை ஓரங்களில் மரங்கள் சாய்தல், மின்சாரம் இல்லாமை, ஓடைகளில் அதிக வெள்ளப் பெருக்கு போன்ற காரணங்களால் போக்குவரத்து தடை ஏற்பட்டது.

காலை 8 மணி வரையிலும் மாலை 4 மணிக்கு மேலும் கடும் பனி மற்றும் கடும் குளிர் நிலவும் சூழ்நிலையில் தொடர்ந்து மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்ட பணி செய்வதில் சிரமம் ஏற்பட்டது. மேலும் நிவர் புயலால் அதிக மழை, அதிக காற்று போன்ற இயற்கை சீற்றங்களால் பேருந்து போக்குவரத்து மாவட்ட நிர்வாகத்தால் சில தினங்கள் நிறுத்தப்பட்டது. சாலை வசதி இல்லாத பல கிராமங்களுக்கு கால்நடையாக சென்று தகவல் சேகரித்தோம். இதில் அட்டை கடித்தல் மற்றும் விலங்குகளின் அச்சுறுத்தல்களுக்கும் அதிகமாக உள்ளானோம்.

இத்தகைய கடும் சூழலிலும் மக்கள் பங்கேற்புடன் கூடிய வளர்ச்சித் திட்டத்தின் முக்கியத்துவம் கருதி பணிகளை செய்து முடித்தோம். எங்களுக்கு மதிப்பூதியமாக சமூக வல்லுநருக்கு ரூ.500/- மற்றும் அணி உறுப்பினர்களுக்கு ரூ.400/- என வழங்கியது எங்களது உழைப்பிற்கேற்ற ஊதியமாக இருந்தது. இப்பணி வாய்ப்பை வழங்கிய தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு மிகுந்த நன்றி. மேலும் திட்டம் சிறப்பாக செயல்படுவதற்கு எங்களது முழு ஒத்துழைப்பை வழங்குவோம் என உறுதியளிக்கின்றோம்” என்று கூறினர்.

பண்ணை சார் வாழ்வாதார குழு

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டமானது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அந்தநல்லூர், முசிறி, மணிகண்டம், துறையூர் மற்றும் மணப்பாறை ஆகிய வட்டாரங்களைச் சார்ந்த 135 ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

மகளிர் திட்டத்தில் பயிற்சி பெற்ற பெண் உறுப்பினர்களைக் கொண்ட திருத்திய மலை பண்ணைசார் வாழ்வாதார உற்பத்தியாளர் குழுக்களுக்கு ரூ.1.50 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டது. இந்த நிதி மூலம் இக்குழுவினர் தட்டை அறுக்கும் இயந்திரம், மருந்து தெளிப்பான் மற்றும் மாட்டுத் தீவனங்கள் வாங்கியுள்ளனர்.

15.12.2020 அன்று திருச்சி மாவட்டம், முசிறி வட்டாரம், திருத்திய மலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திருத்தியமலை பண்ணைசார் வாழ்வாதார உற்பத்தியாளர் குழுக்கள் வாங்கிய இயந்திரங்களை குழுவின் பயன்பாட்டிற்கு முசிறி வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. மனோகர் துவங்கி வைத்தார். திருத்தியமலை பண்ணைசார் வாழ்வாதார உற்பத்தியாளர் குழுவைச் சார்ந்த பெண் உறுப்பினர், திட்ட ஆணையர் திரு. குணசேகர் முன்னிலையில் தட்டை அறுக்கும் இயந்திரத்தை இயக்கிக் காண்பித்தார். மேலும், பண்ணைசார் வாழ்வாதார உற்பத்தியாளர் குழுவிற்கான அலுவலகமும் திறந்து வைக்கப்பட்டது.

திருத்தியமலை பண்ணைசார் வாழ்வாதார உற்பத்தியாளர் குழுவின் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியினை தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மாவட்ட செயல் அலுவலர் திரு. க. இ. ஆரோன் ஜோஸ்வா ரூஸ்வெல்ட் ஏற்பாடு செய்து, குழு எவ்வாறு செயல்பட இருக்கிறது என்பது குறித்து விளக்கிக் கூறினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் செயல் அலுவலர் திரு. துரைராஜ், சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையைச் சார்ந்த திரு. முருகேசன், தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் முசிறி வட்டார அணித் தலைவர் திருமதி. ஜெயசித்ரா, திட்ட செயலர் திரு. அருண் மற்றும் முசிறி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கிராம ஊராட்சித் தலைவர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முதலாளி ஆக்கிய புத்தாக்க திட்டம்



செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் வட்டாரம், பட்டிபுலம் ஊராட்சியை சேர்ந்த அனலினா (த/பெ. பன்னீர்செல்வம்) ஆகிய நான் B.Sc., வரை படித்துள்ளேன். மேலும் டெல்லியில் உள்ள எனது உறவினர் வீட்டில் இருந்தபடியே அழகுக்கலை (Beautician Course) பயின்று தேவையின் அடிப்படையில் இரண்டு வருடங்களாக திருமணம் மற்றும் விழா நிகழ்ச்சிகளில் அழகுக்கலை ஒப்பனை (Makeup) செய்து வந்தேன். எனது வருமானம் எனது குடும்பத்திற்கு ஓரளவிற்கு போதுமானதாக இருந்தது.

இந்தத் தருணத்தில், கொரோனா நோய் உலகத்தை மட்டும் அல்ல எங்கள் குடும்பத்தையும் தடுமாற வைத்தது. கோவிட்19 அரசு ஊரடங்கு உத்தரவினாலும் திடீரென்று வேலையின்மை சூழ்நிலையினாலும், நிலை தடுமாறி மீண்டும் சொந்த ஊருக்கே திரும்பி வர வேண்டிய சூழ்நிலை உருவாகி, வருமானம் இல்லாமல் எனது குடும்பம் வறுமையான நிலைக்கு தள்ளப்பட்டது.

அழகுக் கலையில் ஏற்கனவே போதுமான அனுபவமும், ஆர்வமும் இருந்தும் வசதியின்மையால் என்னால் சொந்தமாக தொழில் துவக்க முடியவில்லை. அப்போது, கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தில் கோவிட்19 சிறப்பு நிதி தொகுப்பின் மூலம் “புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய திறன் பெற்ற இளைஞர்களுக்கு” தொழில் தொடங்க கடனுதவியாக ரூபாய் 1,00,000/- தருவதாக தகவல் அறிந்தேன். அதனடிப்படையில் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்ட வட்டார அலுவலகத்தை அணுகி, விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகளைத் தெரிந்து கொண்டு விண்ணப்பித்தேன்.

எனது விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, கோவிட் 19 சிறப்பு நிதியின் கீழ் ரூபாய் 1,00,000/- கடனாக எனக்கு வழங்கப்பட்டது. மேலும் எனது சொந்த முதலீடான ரூபாய் 1,00,000/- உடன் ரூபாய் 2,00,000/- மொத்த முதலீட்டில் நான் சொந்தமாக மாமல்லபுரத்தில் அழகு நிலையம் தொடங்கியுள்ளேன். எனக்கு இந்த நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு மனமார்ந்த நன்றியினை காணிக்கையாக சமர்ப்பிக்கின்றேன்.

திருநங்கையின் வாழ்வில் புத்தாக்க திட்டம் தந்த திருப்பு முனை

விருதுநகர் மாவட்டம், விருதுநகர் ஒன்றியம், இனாம் ரெட்டியபட்டி கிராமத்தில் ஏழைக் குடும்பத்தில் பிறந்த எனது பெயர் அன்புராஜ் என்ற ரகசியா. எனக்கு வயது 40 ஆகிறது. பள்ளியில் படிக்கும் பொழுதே எனது உருமாறி நான் திருநங்கையாக மாறியதை அறிந்த எனது குடும்பத்தினரும் மற்றும் எனது உறவினர்களும் என்னை வெறுக்கத் தொடங்கினார்கள். பூமியில் பிறந்தது ஒரு குற்றமா? என்ற தாழ்வு மனப்பான்மையுடன், உறவுகளால் ஒதுக்கப்பட்டு சென்னை சென்றேன்.

அங்கே ஒரு துணிக்கடையில் வேலை செய்து வந்தேன். அங்கிருக்கும் திருநங்கைகளின் ஒத்துழைப்பு கிடைத்தது. அதன் மூலம் இந்த உலகத்தில் நாமும் சாதிக்க வேண்டியது நிறைய இருக்கிறது என்ற உயரிய நோக்கத்துடன் உழைக்கத் தொடங்கினேன். அதில் வரும் வருமானத்தைக் கொண்டு நிம்மதியாக வாழ்ந்து வந்தேன்.

இந்தத் தருணத்தில் கொரோனா எனும் கொடிய நோய் பரவலால், அரசு முழு ஊரடங்கு பிறப்பித்தது. இதன் காரணமாக வேலையில்லாமல் சொந்த ஊர் திரும்பிய நான், மறுபடியும் துன்பத்தில் துவண்டு கொண்டு இருந்தேன்.

அப்பொழுதுதான் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கோவிட்19 சிறப்பு நிதி தொகுப்பின் மூலம் "புலம் பெயர்ந்து மீண்டும் சொந்த ஊர் திரும்பிய திறன் பெற்ற இளைஞர்களுக்கு" கடனுதவி வழங்குவதாக அறிந்து, கிராம வறுமை ஒழிப்பு சங்கத்தின் மூலம் கடன் பெற விண்ணபித்தேன். அதன் மூலம் ரூ.1,00,000/- கடனுதவி பெற்று தற்பொழுது சேலைகள் மற்றும் ஜவுளிகளை கொள்முதல் செய்து வியாபாரம் செய்து வருகின்றேன். இதன் மூலம் கிடைக்கும் வருவாய் எனக்கு போதுமானதாக உள்ளது. இந்த சமுதாயத்தில் என்னாலும் சாதிக்க முடியும் என்று நம்பிக்கையோடு நடைபோட்டு வருகின்றேன்.

எனக்கு நம்பிக்கை ஊட்டி நற்பயணம் தொடர வழி ஏற்படுத்திய ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கும், கிராம வறுமை ஒழிப்பு சங்கத்திற்கும் என் உள்ளம் கனிந்த நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

நல்ல செய்தி கிடைத்தது

என் பெயர் கலா. நாமக்கல் மாவட்டம், புதுப்பாளையம் அக்ரஹாரம் ஊராட்சியில் வசித்து வரும் நான், எங்கள் பகுதியில் செயல்படும் ஓம்சக்தி மகளிர் சுய உதவிக் குழுவின் தலைவியாக இருக்கிறேன். என் வாழ்வாதாரமாக, நானும் எனது கணவரும் சேர்ந்து மளிகைக் கடை நடத்தி வருகிறோம். இந்த கொரோனா பரவல் ஆரம்பிக்கும் வரை எனது வியாபாரம் நன்றாக நடந்து கொண்டிருந்தது. உள்கடன் சுழற்சி, வங்கி இணைப்பு எல்லாம் எங்கள் குழுவில் முறையாக நடைபெற்றது.

கொரோனா பரவல் வந்ததும், எனது மளிகைக் கடையில் வியாபாரம் கிட்டத்தட்ட நின்றே போய் விட்டது. எங்களை போன்ற ஏழை மக்களிடம் பணம் இல்லை, என்ன செய்வார்கள்? தொழிலில் இலாபமில்லாமல் போய் விட்டது என்பதையும் தாண்டி முதலுக்கே மோசமானது. நிறைய பொருட்கள் இருந்த எனது கடை கொஞ்சம் கொஞ்சமாக வெறும் கடை ஆனது. எனது கணவர் ஏற்கனவே வியாபாரத்திற்காக வெளியில் இருந்து ரூபாய் ஒரு லட்சம் வரை கடன் வாங்கி இருந்தார்.

பொது ஊரடங்கு என்பதால் நாங்களும், குழந்தைகளும் சாப்பிடாமலா இருக்க முடியும்? குடும்ப செலவு அதிகமாகிக் கொண்டே சென்றது. ஒரு குழு தலைவியாகவும், ஒரு குடும்பத் தலைவியாகவும் எவ்வளவோ பிரச்சனைகளை எதிர்கொண்டு சமாளித்து இருக்கிறேன். ஆனால் கொரோனா பரவல் கால பிரச்சனைகளை என்னால் சமாளிக்க முடியவில்லை. செய்வது அறியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான் ஒரு நல்ல செய்தி கிடைத்தது.

எங்கள் புதுப்பாளையம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கோவிட்19 சிறப்பு நிதி தொகுப்பின் மூலம் உற்பத்தி மூலதனக் கடன் பெற விண்ணப்பிக்கலாம் என்பதனை அறிந்து நானும் விண்ணப்பித்தேன். எனக்கு ரூபாய் 30,000/- கடன் வழங்கப்பட்டது. கோவிட்19 சிறப்பு நிதி தொகுப்பின் மூலம் எங்கள் வியாபாரத்தை மறுசீரமைக்க ஒரு உதவி கிடைத்தது. கிடைத்த பணத்தில் நாங்கள் நடத்தி வந்த கடையின் வாடகை பாக்கியை செலுத்தியதுடன், அரிசி, மிளகாய், பூண்டு, பருப்பு, மசாலா வகைகள் முதலிய சரக்குகளையும் கொள்முதல் செய்தேன். மேலும் காய்கறிகளையும் விற்பனை செய்யத் தொடங்கினேன். இப்போது எனது கடையில் விற்பனை நன்றாக நடக்கிறது. சரியான நேரத்தில் எனக்கு நிதியுதவி வழங்கி வாழ்வளித்த தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு நன்றி... நன்றி... நன்றி...

முற்றக் கச்சேரி

அன்புள்ள முற்றம் வாசகர்களே

சுய உதவிக் குழுவின் ஊக்குனர் மற்றும் உறுப்பினர்களிடையே நடைபெறும் உரையாடல்கள் மற்றும் கேள்வி பதில்கள் வாயிலாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்த விபரங்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் முற்றக் கச்சேரி வெளியிடப்படுகிறது. இது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறோம். இனி முற்றக் கச்சேரிக்குள் போவோமா...

வட்டார வணிக வள மையம் பற்றி சுய உதவிக் குழுவின் உறுப்பினர்களான கமலா மற்றும் ராணி உரையாடிக் கொண்டதைப் பற்றியது இந்தப் பகுதி.

இடம் : சுய உதவிக் குழு அலுவலகம்

கமலா : அக்கா நேத்து நடந்த சுய உதவி குழு கூட்டதுல என்ன சொன்னாங்க, நேத்து என்னால வர முடியாம போச்சி...

ராணி : வராம இருந்துட்டு சும்மா காரணம் சொல்லாதடி.

கமலா : இனி நான் சரியா வந்துடரங்கா ...

ராணி : நேத்து நம்ம வட்டாரத்தில புதுசா துவங்கி இருக்கற வட்டார வணிக வள மையத்துல இருந்து வந்திருந்தாங்கமா... புதிய தொழில் முனைவோருக்கான கூட்டம் நடந்தது, அதுல நம்ம என்ன தொழில் பண்ணலாம்னு சொல்லிட்டு இருந்தாங்க

கமலா : கொஞ்சம் புரியுற மாதிரி சொல்லுக்கா..

ராணி : சொல்றன் கேட்டுக்கோ.... வட்டார வணிக வள மைய அலுவலர்கள், மகளிர் சுய உதவி குழுவில் இருக்குற பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு தொழில் தொடங்க ஊக்குவிக்குற மாதிரி பேசுனாங்க.

கமலா : அப்படி என்னக்கா பண்ண போறாங்க?

ராணி : இவங்க புதிய மற்றும் பழைய திறமையான தொழில் முனைவோர்கள கண்டுபிடிச்சி அவங்களுடைய தொழில முன்னேத்த கூடுதல் பயிற்சியும் வழங்குவாங்கன்னு BBRC நிர்வாக குழு தலைவர் சொன்னாங்க.

கமலா : அக்கா கூடுதல் பயிற்சினா என்னென்ன?

ராணி : ஆ சொல்லுறன், கேட்டுக்கோ. ஏற்கனவே செய்து கொண்டிருக்கிற தொழிலை மேம்படுத்துவது, புதிய தொழில் செய்வதற்குண்டான ஆலோசனை வழங்குவது, உற்பத்தி செய்த பொருட்களை சந்தைப்படுத்துவது, தொழில்களை அரசாங்க பதிவு செய்வது போன்ற பயிற்சிகளைத் தருவாங்களாம்.

கமலா : இவ்ளோ பயிற்சி கொடுக்குறாங்களா! சரி பயிற்சி கொடுத்ததுக்கு அப்பறம் என்ன பண்ணனும்?

ராணி : தொழில் முனைவோருக்கு அடிப்படை நோக்கங்கள் என்னன்னு சொல்லி கொடுத்துட்டு ஒரு சின்ன சந்தை கணக்கெடுப்ப எடுத்துட்டு அதன்படி வணிகத் திட்டம் தயாரிக்க தொழில் முனைவோரை வலியுறுத்துவாங்க.

கமலா : வணிகத் திட்டமா? அத எப்படி தயாரிக்கிறது?

ராணி : இந்த வணிகத் திட்டத்த தயாரிக்க தொழில் முனைவோருக்கு சமுதாய வள வல்லுனரும் (தொழில் வளர்ச்சி) உதவுவாங்க...

கமலா : அக்கா தொழில் முனைவோருக்கு பயிற்சியும் திட்டமும் மட்டும் இருந்தா போதுமா? காசுக்கு எங்க போறது?

ராணி : முழுசா கேளுடி... இவங்க சமூக தொழில் முனைவோர் நிதி கடன் இல்லனா வங்கிக் கடன் வாங்கவும் உதவுவாங்க.

கமலா : ஓ அப்படியா...! எவ்ளோ கடன்கா வாங்க முடியும்?

ராணி : வட்டார அளவிலான கூட்டமைப்போட ஒப்புதலோட அதிகபட்சம் 50,000/- ரூபாய் வர தருவாங்க. மாவட்ட திட்ட மேலாண்மை அலகு அனுமதிச்சா 50,000/- ரூபாய்க்கும் மேல சமூக தொழில் முனைவோர் நிதிய

கடனா வாங்க முடியும். அதுமட்டுமில்லாம முத்ரா கடன் திட்டத்திலும் கடன் கிடைக்க உதவி செய்வாங்க.

கமலா : முத்ரா கடனா? அப்படினா என்னக்கா?

ராணி : நம்ம பிரதம மந்திரி ஏற்கனவே செய்தினிருக்கிற தொழிலை மேம்படுத்த எந்த ஒரு அடமானமும் இல்லாம வங்கியில தொழில் முனைவோர் கடன் வாங்க முத்ரா கடன் திட்டம் கொண்டு வந்திருக்கிறாங்க...

கமலா : ஆமா, அப்படின்னா BBRC-யில் கடன் வாங்கினா நூற்றுக்கு எவ்வளோ வட்டிக்கு கடன் தராங்க, வட்டிய யாரு முடிவு பண்றாங்க? அதப்பத்தி சொல்லுங்க அக்கா...

ராணி : நம்ம மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு வட்டாரத்திலும் இருக்கக் கூடிய வட்டார வணிக மையத்தினுடைய நிர்வாகக்குழுதான் முடிவு பண்றாங்கமா. அதிகப்பட்சமா நூற்றுக்கு வருடத்திற்கு பனிரெண்டு ரூபாய்க்கு மேல் போவக்கூடாதாமா வட்டி.

கமலா : சரி எத்தனை மாத தவணையில் கடனை திரும்ப செலுத்தணுக்கா?

ராணி : அதிகப்பட்சமா 24 மாத தவணையில அசலும் வட்டியும் கட்டணுமாமே...

கமலா : சரி கடன் எடுத்த அடுத்த மாதத்திலிருந்தே கடன திரும்ப செலுத்தணுமா?

ராணி : இல்லடி... ஏற்கனவே செய்து கொண்டிருக்கிற தொழிலுக்கு கடன் வாங்கினா அடுத்த மாதத்திலிருந்தே கடன திரும்ப செலுத்தணும். புது தொழிலுக்கு கடன் வாங்கினா தொழிலுக்கு தகுந்த மாதிரி மூன்று மாதத்திலிருந்து ஆறு மாதம் வரை கடன் திரும்ப கட்டுவதற்கு கால அவகாசம் தருவாங்களாம். ஆனா கடன் விலக்கு காலத்துக்கும் சேர்த்து வட்டி மட்டும். கடன் விலக்கு காலத்திலிருந்து கடன் தொகைக்கு நிர்ணயிக்கப்பட்ட வட்டி கட்டணுமாம்.

ராணி : ஆமா இவ்வளவு நீ விபரமா கேக்கிறியே... நீ எதாவது தொழில் செய்யிறயா?

கமலா : இல்லக்கா... நானு புதுசா ஏதாவது தொழில் ஆரம்பிச்சா கடன் வாங்கிக்கலாம். நம்ம குழுவில தொழில் செய்து கொண்டு இருப்பவர்களுக்கு கடன் வாங்க உதவி செய்யலாமில்ல அதற்கு தாங்கா கேட்டேன்.

ராணி : இனிமே நீ விபரம் கேக்கணும்னா சமுதாய வள பயிற்றுனர் (தொழில் வளர்ச்சி) மொபைல் நம்பரை அனுப்பிறேன் கேட்டு தெரிஞ்சிக்கோ

கமலா : சரிக்கா ரொம்ப நல்லதுக்கா...

(முற்றக் கச்சேரி தொடரும்)

தாய்ப்பாசம்...

அன்னையவள் அமுதூட்டி அரவணைத்து
அளவிலாத அன்புதனைத் தாம்பொ ழிந்து
என்னருமைச் செல்வமென முத்தமிட்டு
எனக்குள்ள சீதனமே எனம கிழ்ந்து
தன்சுகத்தை வாழ்க்கையிலே தான்இ ழந்து
தனக்குவரும் துயர்அனைத்தும் தாங்கிக் கொண்டு
மன்னவனே என்வயிற்றில் பிறந்தாய் என்று
மார்மீதும் தோள்மீதும் தான்சு மந்தாள்...

இனிமையான கதை சொல்லி நிலவைக் காட்டி
இன்பநிலா வாவென்று பாட்டுப் பாடி
கனிபிழிந்து சாறெடுத்து தாம்பு கட்டி
காலமெல்லாம் சிறப்புற்று வாழ்க என்று
புனிதநெறி பண்புதனை எடுத்துச் சொல்லி
பாசமெனும் உறவுக்குப் பால மாகி
இனிஎனக்கு குறையுண்டோ என்ற தாயின்
இன்பத்தின் எல்லைக்கே ஈடும் உண்டோ!

கன்றுக்கும் பசுவுக்கும் உறவு; கூடும்
காக்கைக்கும் குஞ்சுவுக்கும் உறவு; பாடும்
பொன்வண்டு மலருக்கும் உறவு; ஆடும்
பொன்மயில் கருமுகிலுக்கும் உறவு; இன்ப
கன்னிக்கும் காளைக்கும் உறவு; வீசும்
காற்றுக்கும் மூச்சுக்கும் உறவு; எல்லாம்
அன்புத்தாய் குழந்தையின் மேல்வைத் திருக்கும்
அளவில்லாத தாய்ப்பாசம் போன்று(ம்) உண்டோ ?

பாரதி பணிச்செல்வர்,
கவிஞர் பரந்தூர் இராமசாமி

மகளிர் தொழில் முனைவோருக்கு ஓர் அரிய வாய்ப்பு...!

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் ஒவ்வொருவரையும் தொழில் முனைவோராக்கிட வேண்டி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் (DSMS) மற்றும் தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் ஆகியவை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

ஒரு தொழில் முனைவோர் வெற்றியாளராக திகழ்ந்திட அவரது தொழிலினை இலாபத்துடன் நடத்திட அவர்களது உற்பத்தி பொருட்கள் அனைத்தும் நல்ல விலைக்கு விற்பனை செய்யப்பட வேண்டும்.

பெரும்பாலான மகளிர் குழு உறுப்பினர்களுக்கு “தாங்கள் தொழில் செய்து, பொருட்களை உற்பத்தி செய்தால் விற்பனை செய்திட முடியுமா?” என்ற சந்தேகத்தினாலேயே தொழில்களை தொடங்குவதோ, நடத்துவதோ தடைபட்டு வந்தது.

இதுபோன்ற சவால்களை எதிர்கொள்ளும் வகையில் மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களை (DSMS) ஒருங்கிணைத்து தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் முன்னர் உள்ள மாவட்ட கட்டமைப்புகளாக பூமாலை வணிக வளாகம், மதி அங்காடிகளை (Kiosk) முறைப்படுத்துவதுடன், Amazon நிறுவனத்துடன் இணைந்து இணைய வழியில் பொருட்களை விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஆதலால் மகளிர் குழுக்களில் எவரேனும் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டிருந்தால் அவர்களது பொருட்களை மாவட்ட மதி அங்காடிகளிலோ (Kiosk) அல்லது இணைய வழியிலோ விற்பனை செய்திடுவதற்கு தங்களது மாவட்ட மகளிர் திட்ட அலுவலகத்தில் செயல்படும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்க அலுவலகத்தை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்களது பொருட்கள் தரமாகவும், நியாயமான விலையிலும் இருக்கும்பட்சத்தில். மாவட்ட அலுவலகத்தைத் தொடர்பு கொள்வதில் சிரமமிருப்பின், தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தினை 044-28171705 என்ற தொலைபேசி எண்ணிலோ அல்லது tnstatesms@gmail.com என்ற மின்னஞ்சல் வாயிலாகவோ தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவித்துக் கொள்கிறோம்.

“அச்சம் தவிர்த்து உழைத்திடுவீர்...!
அகிலம் முழுமைக்கும் விற்றிடுவீர்...!!

தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம்

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தடுப்புப் பிரிவு

ஆபத்துக்கால அவசர உதவிக்கு

5 நொடியில் நம்மைக் காப்பாற்ற

தமிழ்நாடு போலீஸின் அதிரடி ஆண்ட்ராய்டு ஆப். நம்மைக் காக்கும் காவலன் SOS பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் பிரச்சனைகள், கடத்தல், திருட்டு, ஈவ்டீசிங் என அனைத்து சிக்கல்களிலும் இருந்து விடுதலைபெற ப்ளே ஸ்டோர் வழியாக ஒரு செயலி...

KAVALAN-SOS (Download Procedure)

WOMEN HELP LINE NO : 1091 **CHILD HELP LINE NO : 1098**

பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றத்தடுப்புப் பிரிவு

ஆயிரம் விளக்கு காவல் நிலைய வளாகம்,
கிரீம்ஸ் ரோடு, ஆயிரம் விளக்கு, சென்னை - 600 006.
புகார் தெரிவிக்க வேண்டிய மின்னஞ்சல் (E-Mail) முகவரி
dccwc.chennai@gmail.com

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (91,500 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

“ சமூக ஒருங்கிணைப்பு மூலம் வாழ்வாதார மேம்பாடு அடைய செய்தல் ”

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம்
நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக்குரியது.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month

தொழில் முனைப்பில் வளர்ச்சி!
ஊரக மக்கள் மகிழ்ச்சி!

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

5வது தளம், திரு.வி.க. தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு

(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org TNRTP tn_rtp tn_rtp